[1975 மார்ச் 24

பிரான்மலையை சுற்றுலா மையமாக்கல்

* 435 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிரான்மலையை சுற்றுலா வாரியத்தில் பார்க்க வேண்டிய இடம் என சேர்க்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. அ. தேவேந்திரன்: தலைவரவர்களே, பிரான்மலை என்பது 'முல்லைக்கு தேர் கொடுத்த பாரியின் மலை' ஆகும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதோடு மருது பாண்டியர்கள் கூட அங்கே இருந்தார்கள் என்று வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த அந்த இடத்தை சுற்றுலாத் துறையில் சேர்த்தால் மிகுந்த பயனுள்ளதாக இருக்குமே. அதுபற்றி அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது முக்கியமான சுற்றுலா சார்ந்த இடங்கள் என்று கணிக்கப்படுகிற நிலை இல்லை. சுற்றுலாவுக்கு ஏற்ற வகையில் செல்வாக்கு பெற்று, பொதுமக்களை ஈர்க்கின்ற வகையில் சிறப்பு பெற்று, பொது மக்கள், உள்நாட்டு மக்கள், வெளி மாநிலத்து மக்கள், வெளி நாட்டு மக்கள் எல்லாம் அந்த இடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பெருமளவில் வந்து செல்லக்கூடிய வகையில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்ற இடமாக இருந்தால் அதை ஒரு சுற்றுலா சிறப்புப் பெற்ற இடமாக அமைத்து, சுற்றுலா வாரியம், சுற்றுலா துறை மூலமாக தக்க வசதிகளைச் செய்து கொடுக்கலாம். அது அல்லாமல் இது இது சுற்றுலா சிறப்பிடம் என்று நாம் பட்டியல் போட முடியாது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முல்லைக்கு தேர் ஈந்த பாரியின் மலை என்பது எல்லோருக்கும் தெரியும் என்று சொன்னார்கள். இங்கே இருப்பவர்களுக்கே எல்லோருக்கும் தெரியுமா என்பது சந்தேகம் (சிரிப்பு). பெருமளவில் மக்கள் வந்து செல்லக்கூடிய வகையில் மக்களை ஈர்க்கின்ற வகையில் அந்த இடம் சிறப்புப் பெற்றிருந்தால் அதற்கேற்ப சுற்றுலா வாரியம் வசதிகளைச் செய்யும்.

1975 மார்ச் 24]

(முற்பகல் 9-30)

திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலுள்ள சுற்றுலாவுக்குத் தகுதியான இடங்கள் என்னவென்று நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரிவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற அங்கத்தினர்களுக்கே தெரியாதபோது பொதுமக்களுக்குத் தெரியவும் நியாயம் இல்லை. ஆகவே, சுற்றுலாவுக்கு ஏற்ற முக்கியமான இடங்களைச் சினிமாப் படங்கள் எடுத்து—நாட்டு மக்களிடையே விளம்பரப்படுத்த—அதன் மூலம் சுற்றுலா இடங்களை அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சுற்றுலா வாரியம் இது சம்பந்தமாக வண்ணப்படம் எடுத்து—வெளிநாடுகளுக்கு அனுப்பவும், உள்நாட்டில் பலயிடங்களில் போட்டுக்காட்டி விளம்பரப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. முக்கியமான இடங்கள் கோவில், கோபுர, சிற்பக்கலைகள், நாட்டியக் கலை சம்பந்தமான சிற்பங்கள் ஆகிய எல்லாவற்றையுங்கூட ஒரு படமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் மேல்நாட்டாருக்கு எந்த முறையில் படம் எடுத்தால் கவர்ச்சிகரமாக இருக்கும் என்று கருதி, அந்த முறையிலும் நிபுணர்களைக் கொண்டு வண்ணப் படம் எடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் சுற்றுலா நிலையங்கள் இருக்கின்றன, அவற்றை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவதாகக் கருதப்படுகிறது.

சென்னை மாநகரம்—அமைந்துள்ள மாவட்டம் சென்னை.

திருக்கழுக்குன்றம் (யாத்திரைத்தலம்), திருத்தணி (யாத்திரைத்தலம்), காஞ்சிபுரம் (ஆலயச் சிற்பங்கள், யாத்திரைத்தலம்), மாமல்லபுரம் (ஆலயச் சிற்பங்கள்), வேடந்தாங்கல் (பறவைகள் உய்விடம்)—அமைந்துள்ள மாவட்டம் செங்கற்பட்டு.

வேலூர் (கோட்டை), திருவண்ணாமலை—அமைந்துள்ள மாவட்டம் வட ஆற்காடு.

சிதம்பரம் (யாத்திரைத்தலம்), பிச்சாவரம் (உல்லாச விருந்துக்கேற்ற இடம் தாவர இயல் முக்கியத்துவம் வாய்ந்த இடம்) செஞ்சி, (கோட்டை)—அமைந்துள்ள மாவட்டம் தென் ஆர்காடு.

காவிரிப்பூம்பட்டினம் (தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடம்), கோடிக்கரை (பறவைகள் உய்விடம்), தஞ்சாவூர் (ஆலயச் சிற்பங்கள்), திருவையாறு (யாத்திரைத்தலம், தியாகராஜர் வாழ்ந்த இடம்), வேளாங்கண்ணி (கிறிஸ்தவ யாத்திரைத் தலம்), நாகூர் (முகமதியர் யாத்திரைத் தலம்), கும்பகோணம் (யாத்திரைத்தலம்)—அமைந்துள்ள மாவட்டம் தஞ்சாவூர்.

திருச்சிராப்பள்ளி (யாத்திரைத்தலம்), ஸ்ரீரங்கம், நார்த்தமலை, சித்தன்னவாசல், புதுக்கோட்டை, திருமயம் (வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை)—அமைந்துள்ள மாவட்டங்கள் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை.

மதுரை (யாத்திரைத்தலம் ஆலயச் சிற்பங்கள்) சுருளி அருவி (அருவியும், கண்கவர் காட்சியும்), கோடைக்கானல் (மலை விழைவிடம்), அழகர்கோயில் (யாத்திரைத்தலம்)—அமைந்துள்ள மாவட்டம் மதுரை.

இராமேஸ்வரம் (யாத்திரைத்தலம்)—அமைந்துள்ள மாவட்டம் இராமநாதபுரம்.

திருநெல்வேலி (யாத்திரைத்தலம்)—சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்தது, ஆலயச் சிற்பங்கள் நிறைந்தது; திருச்செந்தூர் (யாத்திரைத்தலம்), சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடம்; பாபநாசம் (அருவி)—அமைந்துள்ள மாவட்டம் திருநெல்வேலி.

திருமூர்த்தி அருவி (அருவியும், கண்கவர் காட்சியும்), டாப்ஸ்லிப் (வேட்டை ஆடுவதற்கு ஏற்ற இடம், வன விலங்கு உய்விடம்)—அமைந்துள்ள மாவட்டம் கோயம்புத்தூர்.

திரு. க. உரொ. எட்மண்ட்: நெல்லை மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களைப்பற்றிச் சொன்னார்கள். பாளையங்கோட்டைக்கு அருகில் இருக்கிற கிருஷ்ணாபுரம் சிற்பங்களில் தலை சிறந்த இடம்—அதையும் இந்த லிஸ்டில் சேர்க்க முன்வருவார்களா?

1975 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முக்கியமான இடங்களைப்பற்றித்தான் குறிப்பிட்டேன் தவிர எல்லா இடங்களையும் குறிப்பிடவில்லை. ஆவுடையார்கோவிலைப்பற்றியும் சொல்லவில்லை. நான் முக்கியமான இடங்களைத்தான் குறிப்பிட்டேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கால்வாய்களைப் புதுப்பித்தல்.

* 436 வினா—**திரு. ஏ. எம். இராஜா** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால்களை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

The Hon. THIRU P. U. SHANMUGHAM: (*a*) & (*b*) Yes. Government have approved of scheme for remodelling of the Kalingarayan channel, and Arakkankottai channel. Remodelling of Thadapalli channel is under consideration.

* 437 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி அருகிலுள்ள பழைய காளிங்கராயன் கால்வாயை அபிவிருத்தி செய்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. எஸ். கே. சுப்பிரமணியம் : காளிங்கராயன் வாய்க்கால் வேலை துவக்கப்பட்டுவிட்டதா? துவக்கப்பட்டுவிட்டால் இதற்காக எவ்வளவு மூலதனம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு செலவாகி யிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காளிங்கராயன் வாய்க்கால் வேலை துவக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறேன். அதற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிற தொகை ரூ. 60 லட்சம். எவ்வளவு செலவாகியிருக்கிறது என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை.